அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021

## 46 - இந்துநாகரிகம்

### புள்ளியிடும் திட்டம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
(1822-1879)

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Department of Examinations - Sri Lanka

# க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 46 - இந்து நாகரிகம்

## புள்ளி வழங்கும் திட்டம்

### பத்திரம் II

### பகுதி I

**ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் உரித்தாகும்.**

| | | |
|---|---|---|
| வினா 01 | - 4 × 05 | = 20 புள்ளிகள் |
| வினா 02 | - 4 × 05 | = 20 புள்ளிகள் |
| வினா 03 | - 4 × 05 | = 20 புள்ளிகள் |

எவையேனும் 02 வினாக்கள் 2 × 20 = 40 புள்ளிகள்

### பகுதி II

| | | |
|---|---|---|
| வினா 04 | - 2 + 6 + 6 + 6 | = 20 புள்ளிகள் |
| வினா 05 | | = 20 புள்ளிகள் |
| வினா 06 | | = 20 புள்ளிகள் |
| வினா 07 | | = 20 புள்ளிகள் |
| வினா 08 | | = 20 புள்ளிகள் |

எவையேனும் 03 வினாக்களுக்கு 3 × 20 = 60 புள்ளிகள்

பகுதி I - 40 புள்ளிகள்
பகுதி II - 60 புள்ளிகள்

மொத்தம் - 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி கணித்தல் : பத்திரம் I = 50 புள்ளிகள்
பத்திரம் II = 100 புள்ளிகள்

$= 50 + \left[\frac{100}{2}\right] = 100$ புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations- Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

○ ○ ○

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. சிந்துவெளி நாகரிக காலத்தில் நிலவியதாகக் கருதப்படும் வழிபாட்டு முறைகளைக் கொண்ட தொகுதி
(1) பிதிரர் வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு
(2) பசுபதி வழிபாடு, தரைப்பெண் வழிபாடு
(3) லிங்க வழிபாடு, கண்ணகி வழிபாடு
(4) யம வழிபாடு, ரிஷி வழிபாடு
(5) பசுபதி வழிபாடு, ரிஷி வழிபாடு

2. வேத காலத்தில் வைத்தியர்களுள் தலைசிறந்த வைத்தியநாதனாகப் போற்றப்பட்ட தெய்வம்
(1) உருத்திரன் (2) வருணன் (3) இந்திரன்
(4) அதிதி (5) பூஷன்

3. பெண்களின் நல்வாழ்வு பற்றிய 'ஸ்திரீகர்மாணி' என்ற மந்திரம் இடம்பெறும் நூல்
(1) இருக்கு வேதம் (2) பிராமணங்கள் (3) அதர்வ வேதம்
(4) ஆரணியகம் (5) மகாபாரதம்

4. "அன்பே சிவம்" எனச் சிவனைப் போற்றியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார்
(2) உய்யவந்த தேவர்
(3) மெய்கண்டார்
(4) திருமூலர்
(5) அருணந்தி சிவாச்சாரியார்

5. சாக்த ஆகமங்களைக் குறிக்கும் மற்றொரு பெயர்
(1) தந்திரங்கள் (2) சிரௌதம் (3) தேவிமாகாத்மியம்
(4) ஸ்ரீவித்யா (5) சண்டிகா

6. ஆகமங்களில் ஞானபாதம் கூறும் பொருள் மரபைக் குறிப்பது
(1) அட்டாங்க யோகங்கள் (2) முப்பொருள் உண்மை (3) உற்சவம்
(4) ஆலய அமைப்பு (5) பிராயச்சித்த விதி

7. இறைவனை "வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே..." என தேவாரத்தினால் போற்றியவர்
(1) சுந்தரர் (2) அப்பர் (3) சம்பந்தர்
(4) மணிவாசகர் (5) காரைக்காலம்மையார்



Department of Examinations - Sri Lanka

**8.** வேத காலத்தில் தெய்வங்களிடையே அவிர்ப்பாகம் கொண்டு செல்லும் தேவதூதனாக விளங்கிய தெய்வம்
(1) மித்திரன் (2) வருணன் (3) அக்கினி
(4) சவிதா (5) பர்ஜன்யன்

**9.** சங்கரர் தமது கோட்பாட்டில் உலகம் உண்மையல்ல என்பதற்கு முன்வைத்த வாதம்
(1) அவச்சேத வாதம் (2) பிரதிபிம்ப வாதம் (3) விவர்த்த வாதம்
(4) அநிர்வசநீயம் (5) பரிணாம வாதம்

**10.** இந்து தத்துவ மூலங்களில் 'பிரஸ்தானத்திரயம்' என்பதில் அடங்கும் மூன்று நூல்களின் தொகுதி
(1) பிராமணம், ஆரணியகம், வேதாங்கம்
(2) இருக்கு, யசுர், சாமம்
(3) உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை
(4) மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம்
(5) ஸ்ரீபாஷ்யம், சிவானந்தலஹரி, மாண்டூக்கிய காரிகை

**11.** இலங்கையில் புகழ்பெற்ற தான்தோன்றீச்சரங்களில் ஒன்று காணப்படும் இடம்
(1) தெவிநுவர (2) நல்லூர் (3) திருக்கேதீச்சரம்
(4) கொக்கட்டிச்சோலை (5) கீரிமலை

**12.** "முப்பொருள் உண்மையும் ஐவகைப் பேதங்களும் நிலையானவை" எனக் கூறும் தத்துவம்
(1) துவைதம் (2) அத்வைதம் (3) சிவாத்துவிதம்
(4) விசிஷ்டாத்வைதம் (5) துவைதாத்வைதம்

**13.** இந்துச் சிற்பங்களில் இடம்பெறும் பல்வேறு குறியீட்டு அர்த்தங்களை வெளிப்படுத்துபவை
(1) கையமைதிகள் (2) ஆசன நிலைகள் (3) பங்க அமைதிகள்
(4) ஆடை அணிகலன்கள் (5) கேச அலங்காரம்

**14.** ஆலயத்தில் நிகழும் வழிபாட்டில் "உலகில் வாழும் மக்கள் அனைவரும் நலமே வாழ்வார்களாகுக" என்ற ஆசியை சிவாச்சாரியார் எப்போது வழங்குவார்?
(1) திருப்பணியின்போது (2) ஆலய சேவையின்போது
(3) சுவாமி எழுந்தருளும்போது (4) இறைவனுக்கு நிகழும் பூசையின் நிறைவில்
(5) நைவேத்தியம் வழங்கும்போது

**15.** சிவாகமங்களில் கிரியாபாதம் கூறும் 'பிராயச்சித்தம்' என்பது எதனைக் குறிக்கின்றது?
(1) ஆலயத்தில் ஏற்படும் குறைநிவர்த்தி (2) அக்கினி வளர்த்தல்
(3) அபிஷேகம் செய்தல் (4) யாகபூசை
(5) இறைவனுக்குரிய திருவிழா

**16.** 'சிவஞானபோதத்தின் வழிநூல்' எனப் போற்றப்படும் சித்தாந்த சாத்திரம்
(1) திருவுந்தியார் (2) திருக்களிற்றுப்படியார் (3) சிவஞானசித்தியார்
(4) உண்மைநெறி விளக்கம் (5) சங்கற்பநிராகரணம்

**17.** குளக்கோட்டனின் திருக்கோணேஸ்வர ஆலயப் பணிகள் பற்றி அறிய உதவும் சான்றாதாரம்
(1) சூளவம்சம் (2) பதவியாக் கல்வெட்டு (3) திருக்கரசைப் புராணம்
(4) தட்சணகைலாச புராணம் (5) ஸ்ரீ கைலாசநாத புராணம்

**18.** ஆலயக் கட்டடங்களை சாஸ்திரரீதியில் நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவன்
(1) புரோகிதன் (2) சிற்பி (3) சூத்திரகிராகி
(4) வர்த்தகி (5) ஸ்தபதி

**19.** சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயத்தில் முன்னைநாதர் சுவாமியுடன் எழுந்தருளியுள்ள அம்பாளின் பெயர்
(1) ஸ்ரீ வடிவாம்பிகை (2) பார்வதி அம்பாள் (3) கௌரி அம்பாள்
(4) மாதுமையாள் (5) கமலாம்பிகை

20. தென்னாட்டுச் சைவ மரபில் இறைவனைத் தோழமை உறவில் வழிபட்ட நாயனார்
(1) கண்ணப்பர் (2) சுந்தரர் (3) பூசலார்
(4) சிறுத்தொண்டர் (5) அப்பர்

21. சோழர்காலத் தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபெயர்
(1) தோணிபுரத்தீசர் கோயில் (2) திருவீரட்டானேசுவரர் கோயில்
(3) ஏகாம்பரேசுவரர் கோயில் (4) தென்திசைமேரு
(5) கைலாசநாதர் கோயில்

22. மாமல்லபுரக் கணேசர் கோயிற் கல்வெட்டின் மூலம் தனது ஆழ்ந்த சிவபக்தியினை வெளிப்படுத்திய பல்லவ மன்னன்
(1) இரண்டாம் நரசிம்மவர்மன் (2) பரமேசுவர மன்னன்
(3) மகேந்திரவர்மன் (4) நந்திவர்மன்
(5) சிம்மவிஷ்ணு

23. யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் வெளிவந்த நூல்களில் ஒன்று
(1) சைவசமய சிந்தாமணி (2) நடராஜ வடிவம்
(3) சைவதூஷண பரிகாரம் (4) ஞானரத்தினாவளி
(5) சரசோதிமாலை

24. சிவாலயங்களின் விமானத்தின் கோஷ்டங்களில் இடம்பெறும் மூன்று தெய்வங்களைக் கொண்ட தொகுதி
(1) இலிங்கோற்பவர், தட்சணாமூர்த்தி, பிரம்மன்
(2) மகாவிஷ்ணு, பிரம்மன், சந்திரசேகரர்
(3) இலிங்கோற்பவர், பிரம்மன், காலாரி
(4) திரிபுராந்தகர், தட்சணாமூர்த்தி, விஷ்ணு
(5) உமாமகேசுவரர், அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர்

25. இந்துப் பண்பாட்டின் அறிவு வளர்ச்சிக்காக வடமொழி இலக்கிய வரலாறு, சைவத் திருக்கோயிற் கிரியை நெறி ஆகிய நூல்களை வெளியிட்ட இலங்கை அறிஞர்
(1) பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் (2) காசிவாசி செந்திநாதையர்
(3) அருணாசல தேசிகர் (4) சுவாமி ஞானப்பிரகாசர்
(5) பேராசிரியர் க. கைலாசபதி

26. "என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக" என்ற வேண்டுதல் இடம்பெறும் நூல்
(1) மகாபாரதம் (2) பிருகதாரண்யக உபநிடதம் (3) இராமாயணம்
(4) சுக்கிர நீதி (5) தைத்திரிய உபநிடதம்

27. அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையும் வகையில் கௌடபாதர் இயற்றிய நூலின் பெயர்
(1) பிரமசூத்திரம் (2) மாண்டூக்கிய காரிகை (3) விவேக சூடாமணி
(4) வேதாந்த சங்கிரகம் (5) வேதாந்த தீபம்

28. சங்கரர் ஆற்றிய முக்கிய பணிகளில் ஒன்று
(1) ஆலய சேவை (2) அடியார் சேவை
(3) வேதாந்த மடங்களை அமைத்தல் (4) பூசைக்கு மலர் கொய்தல்
(5) ஆலயத் திருப்பணி

29. சைவ மக்களுக்கு சைவ சமயத்தின் ஆன்மீக வழியை குருசீட மரபை அடிப்படையாகக் கொண்டு நூல்களின் மூலம் விளக்கிக் கூறியவர்கள்
(1) சிவாச்சாரியார்கள் (2) ஆலய அறங்காவலர்கள் (3) சந்தான குரவர்கள்
(4) பண்ணிசை பாடுவோர் (5) புராண படனகாரர்

Department of Examinations - Sri Lanka

**30.** பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் நடுநாயகமாக விளங்குவது
(1) சிவஞானபோதம் (2) சிவப்பிரகாசம் (3) உண்மை விளக்கம்
(4) நெஞ்சுவிடு தூது (5) திருக்களிற்றுப்படியார்

**31.** சங்க இலக்கியம் மக்களுக்கு அறிவுறுத்தும் பயனுள்ள வாசகமாவது,
(1) என் கடன் பணி செய்து கிடப்பதே. (2) யாதும் ஊரே யாவரும் கேளிர்.
(3) நமச்சிவாய வாழ்க; நாதன் தாழ் வாழ்க. (4) கோபுர தரிசனம் கோடி புண்ணியம்.
(5) பெற்றோரைப் பேணு.

**32.** 'இந்திய மருத்துவத்தின் தந்தை' எனப் போற்றப்படுபவர்
(1) வராகமிகிரர் (2) ஆரியபட்டர் (3) தன்வந்திரி
(4) லாட தேவர் (5) பிரம குப்தர்

**33.** தமிழகத்தில் வைணவ சமயத்தை வளம்படுத்துவதற்காக ஆழ்வார்கள் மேற்கொண்ட பணிகளில் முதன்மையானதாகக் கருதத்தக்கது
(1) ஆலய சேவை
(2) புராண படனம் செய்தமை
(3) திருப்பணிகளுக்கு உதவியமை
(4) தனிமையில் தியானத்தில் ஈடுபட்டமை
(5) திருமால் மீது தமிழில் தோத்திரம் பாடி பக்தியை வளர்த்தமை

**34.** இந்துக்களின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய விபரங்களைத் தரும் நூல்
(1) கைவல்ய நவநீதம் (2) பராசரஸ்மிருதி (3) அர்த்த சாஸ்திரம்
(4) ஞானாமிர்தம் (5) மானசாரம்

**35.** இலங்கையில் பொலன்னறுவைக்கால கோயில்களில் கண்டெடுக்கப்பட்ட உலோக விக்கிரகங்களில் இரண்டினைக் கொண்ட தொகுதி
(1) சண்டேசுவரர், பைரவர் (2) நடராஜர், சோமாஸ்கந்தர்
(3) காரைக்காலம்மையார், தட்சணாமூர்த்தி (4) ஷண்முகர், திரிபுராந்தகர்
(5) கண்ணகி, திரௌபதி

**36.** சிற்பக்கலை மரபில் சிற்பக்கலைஞன் உச்சரிக்கும் தியானமந்திரங்களின் பயனாக அமைவது
(1) விக்கிரங்களைச் சிற்ப பிரமாணங்களுக்கேற்ப மரபு வழியில் வடித்தெடுத்தல்
(2) தன்னுடன் பணியாற்றுபவர்களுக்கு நன்மை கிடைத்தல்
(3) சமூகத்திற்கு நன்மை கிடைத்தல்
(4) அழகுணர்வை உண்டுபண்ணுதல்
(5) தனக்கு நன்மை கிடைத்தல்

**37.** குப்தர்காலக் கோயிற் கட்டடக்கலையின் பிரதான பாணியாவது
(1) நாகர பாணி (2) வேஸர பாணி (3) திராவிட நாகர பாணி
(4) நாகர வேஸர பாணி (5) திராவிட பாணி

**38.** "ஓசை ஒலி எலாம் ஆனாய்..." என இறைவனைப் போற்றி இசைக்கலைக்கு வளமூட்டியவர்
(1) சேக்கிழார் (2) நம்பியாண்டார் நம்பி (3) அப்பர்
(4) சுந்தரர் (5) திலகவதியார்

**39.** தமிழகத்தில் தீயின் அம்சமாக சிவபெருமானை வழிபடும் திருத்தலம்
(1) திருவையாறு (2) சிதம்பரம் (3) திருக்காளத்தி
(4) திருவண்ணாமலை (5) திருக்கடவூர்

**40.** 'ஐந்தாம் வேதம்' எனப் போற்றப்படுவது
(1) தர்மசாத்திரம் (2) வேதாங்கம்
(3) மகாபாரதம் (4) வைணவ ஆகமம்
(5) கிருஹ்ய சூத்திரங்கள்

Department of Examinations - Sri Lanka

● **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A வேதாந்தக் கோட்பாட்டை விளக்குவது | F சமயப் பிரசங்கம் மூலம் சமய விழிப்புணர்வு | K பெரியாரைப் போற்றுதல் | P தலப் பெருமை கூறுவன |
| B பிறர் நலம் பேணல் | G சிவனது தெய்வீகப் பெருமை கூறுவன | L கல்வெட்டுக்கள் | Q இசை மற்றும் பண்ணிசைக் கச்சேரி |
| C சமய விழாக்களின் நேரடி வர்ணனை | H விருந்தோம்பல் | M நமசிவாய மந்திரத்தைப் போற்றுவன | R பகவானிடம் சரணாகதி அடைதல் |
| D தொல்பொருட் சின்னங்கள் | I அவதாரக் கோட்பாட்டைக் கூறுவது | N சமய அறிஞர் பேட்டிகள் | S உண்மை பேசுதல் |
| E இசைத்தன்மை வாய்ந்தவை | J இலக்கியச் சான்றுகள் | O கர்ம யோகம் | T வெளிநாட்டார் குறிப்புகள் |

**41.** மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ இந்து சமயம் கூறும் போதனைகளைக் கொண்ட தொகுதி
(1) A, G, L, T (2) B, H, K, S (3) C, H, O, T (4) D, J, K, P (5) E, H, N, R

**42.** பகவத்கீதையின் சிறப்பம்சங்களைக் கொண்ட தொகுதி
(1) A, I, O, R (2) B, J, L, S (3) C, F, K, T (4) D, I, L, Q (5) D, G, M, S

**43.** இந்துப் பண்பாட்டை மக்களிடையே கொண்டு செல்லும் ஊடகங்களின் செயற்பாடுகளைக் கொண்ட தொகுதி
(1) B, H, M, Q (2) C, F, N, Q (3) D, H, K, P (4) E, J, O, S (5) E, J, L, T

**44.** இந்து நாகரிக வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களைக் கொண்ட தொகுதி
(1) A, G, O, R (2) B, H, L, S (3) C, H, K, T (4) C, F, O, R (5) D, J, L, T

**45.** நாயன்மார்களின் தெய்வீகப் பாடல்களின் பயன்களைக் கொண்ட தொகுதி
(1) B, H, K, S (2) C, F, K, T (3) D, H, L, T (4) E, G, M, P (5) E, F, M, Q

Department of Examinations - Sri Lanka

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**46. இந்துக் கலையின் சிறப்பு**

(1) கலை ஒரு யோக சாதனம் எனக் குறிப்பிடப்படுகின்றது.
(2) கலை என்பது அளவு பொருத்தத்துடன் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது.
(3) கலையுணர்வு பக்தனை மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயர்த்திவிடும்.
(4) இலங்கையில் அறிஞர் எவரும் இந்துக் கலைக் கோட்பாடு பற்றிய நூல்களை வெளியிடவில்லை.
(5) கலை அனுபவத்தின் மூலம் மன ஒருமைப்பாடு ஆன்மீக இன்பம் என்பன கிடைக்கும் எனக் கூறுவர்.

**47. தர்மசாத்திரங்களும் மனிதகுல மேம்பாடும்**

(1) தர்மசாத்திரங்கள் 'ஸ்மிருதி' என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.
(2) மனித வாழ்வியல் பற்றிய மிகப் புராதன நூல்கள் தர்மசாத்திரங்களாகும்.
(3) தர்மசாத்திரங்கள் ஆச்சிரம தர்மம், அரச தர்மம், சட்டம், நீதி பரிபாலனம் என்பன பற்றிக் கூறுகின்றன.
(4) தர்மசாத்திரங்கள் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்ற அன்றாட வாழ்க்கைநெறிகளைக் காட்டும் விதிகளைக் கூறுகின்றன.
(5) நாரதர் போன்றோரது தர்மசாத்திரங்களில் பெண்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

**48. இந்துப் பண்பாட்டில் இராமாயணத்தின் மேன்மை**

(1) இந்தி மொழியில் துளசி இராமாயணம் எழுந்தது.
(2) தமிழில் கம்பரால் கம்பராமாயணம் இயற்றப்பட்டது.
(3) இராமாயணத்தின் ஆதிகவியாக வியாஸர் போற்றப்படுகின்றார்.
(4) வடமொழியில் எழுந்த இராமாயணம் இதிகாசங்களில் ஒன்றாகும்.
(5) இராமாயணம் இந்துக்களின் வாழ்வியல் விழுமியங்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது.

**49. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாடு**

(1) இக்காலத்தில் மக்களிடையே வைரவர் வழிபாடு சிறப்பாகக் காணப்பட்டது.
(2) பிறசமயச் செல்வாக்கு இக்காலப்பகுதியில் காணப்பட்டமையால் சைவசமயம் பாதிப்புற்றது.
(3) இலங்கை வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி பிறநாட்டவரது ஆட்சிக்காலமாகும்.
(4) இக்காலத்தில் சைவசமயத்தைப் பாதுகாக்க சமயப் பெரியார்கள் பலர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.
(5) மக்களிடையே சமய அறிவைப் பரப்ப இக்காலப்பகுதியில் அச்சியந்திரசாலை சார்ந்த வசதிகள் இல்லாதது பெருங்குறைபாடாகும்.

**50. இந்துக்கள் அறிவியலில் பெற்ற ஆற்றலைக் காட்டும் வானியற் சிந்தனைகள்**

(1) பண்டைய வானியற் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(2) வானியல், சோதிடம் பற்றிய சிந்தனைகள் மக்கள் வாழ்வை வளப்படுத்துவன.
(3) இந்திய வானியலாளர்கள் கிரகணம் பற்றிய காரணத்தை அறிந்திருக்கவில்லை.
(4) பண்டைய இந்தியர்கள் வானியல் சார்ந்த விடயங்களில் நிரம்பிய அறிவுடையோராய் விளங்கினர்.
(5) இந்திய வானியல் அறிஞர்களுள் முதலாம் ஆரியபட்டர் வானியல் சார்ந்த புலமையாளராவார்.

❊ ❊ ❊

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)**

| විෂයය අංකය பாட இலக்கம் | 46 | විෂයය பாடம் | **இந்து நாகரீகம்** |
|---|---|---|---|

**ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்**

**I පත්‍රය/பத்திரம் I**

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 4 | 31. | 2 | 41. | 2 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 2 | 32. | 3 | 42. | 1 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 5 | 33. | 5 | 43. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 1 | 34. | 3 | 44. | 5 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 1 | 35. | 2 | 45. | 4 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 2 | 36. | 1 | 46. | 4 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 2 | 37. | 1 | 47. | 5 |
| 08. | 3 | 18. | 5 | 28. | 3 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 3 | 39. | 4 | 49. | 5 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 1 | 40. | 3 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** இந்துப் பண்பாட்டை வளம்படுத்துவதில் மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) புராணங்களின் அமைப்பு
(ஆ) புராணங்களின் பகுப்பு
(இ) புராணங்கள் கூறும் வழிபாட்டு முறைகள்
(ஈ) பிற்காலப் பண்பாட்டு வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம் (5 × 4 = 20 புள்ளிகள்)

**2.** தமிழகத்தில் பல்லவர்காலக் கோயிற் கட்டடக்கலையின் படிமுறை வளர்ச்சியை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) கட்டடக்கலை வளர்ச்சிக்கு மன்னர்களின் பங்களிப்பு
(ஆ) குடைதளிகள்
(இ) மலைதளிகள்
(ஈ) கட்டுத்தளிகள் (5 × 4 = 20 புள்ளிகள்)

**3.** இலங்கையில் இந்து சமய பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்பினை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) வாழ்வியல் அறிமுகம்
(ஆ) சமயப்பணி
(இ) கல்விப்பணி
(ஈ) கலைப்பணி (5 × 4 = 20 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

**4.** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுஜரது விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) 'விசிஷ்டாத்வைதம்' எனும் சொல்லின் பொருள் விளக்கம் (2 புள்ளிகள்)

(ஆ) ஈஸ்வரன் (6 புள்ளிகள்)

(இ) ஆன்மா (6 புள்ளிகள்)

(ஈ) ஆன்ம விடுதலைக்கான வழிகள் (6 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்த தத்துவ மரபில் ஆன்மா பற்றிய கொள்கையை ஆன்மாவின் இயல்புகள், அவற்றின் இலட்சியம் ஆகியவற்றின் அடிப்படையில் விவரிக்குக. (20 புள்ளிகள்)

**6.** இந்துக்களின் வாழ்வியலில் 'அறம்' பெறுகின்ற முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** இந்து அறிவியல் மரபில் மருத்துவக் கலையின் சிறப்பம்சங்களை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**8.** புராதன இந்துக்கள் பேணி வளர்த்த கல்விப் பாரம்பரியம் பற்றி அதன் நோக்கம், கல்வி முறை ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக. (20 புள்ளிகள்)

❊ ❊ ❊

Department of Examinations - Sri Lanka

# 46 - இந்துநாகரிகம் II

## பகுதி – I

**01. இந்துப்பண்பாட்டை வளம்படுத்துவதில் மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் விபரிக்குக**

**அ) புராணங்களின் அமைப்பு**

**ஆ) புராணங்களின் பகுப்பு**

**இ) புராணங்கள் கூறும் வழிபாட்டு முறைகள்**

**ஈ) பிற்கால பண்பாட்டு வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம்**

**(4 x 05 = 20 புள்ளிகள்)**

**அ) புராணங்களின் அமைப்பு**

இந்துப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களை அறிவதற்குத் துணைபுரியும் சமய இலக்கியங்களின் வரிசையில் மகாபுராணங்கள் முக்கியத்துவமுடையன. வேதங்களை அடுத்து முக்கியத்துவம் பெறுபவை புராணங்களே எனில் மிகையில்லை.

புராணம் என்பது "புராதன காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவது" என்ற பொருளைத் தருவதாகவுள்ளது. "கடந்த கால நிகழ்வுகளின் பதிவேடு" என்ற பொருளிலும் புராணம் என்ற சொல் விளக்கம் பெறுகின்றது. புராணங்களில் பஞ்சலட்சணங்கள் கூறப்பட்டுள்ளன. அவை அவற்றின் பண்பாக உள்ளன.

1. சர்க்கம் - படைப்பு
2. பிரதிசர்க்கம் - மீள்படைப்பு
3. வம்சம் - வம்ச பரம்பரை
4. மன்வந்தரம் - மனுக்களின் காலம்
5. வம்சானுசரிதம் - வம்சங்களின் வரலாறு

இவற்றைவிட அவற்றுக்கு தசலட்சணங்களும் கூறப்பட்டுள்ளன. மகாபுராணங்கள் வடமொழியில் உள்ளன.

**(05 புள்ளிகள்)**

**ஆ) புராணங்களின் பகுப்பு**

புராணங்கள் போற்றிக் கூறும் கடவுளர்க்கேற்ப அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை மகாபுராணங்கள் எனப்படுகின்றன. ஸ்காந்த புராணத்தின்படி அவை பின்வரும் நிலையில் பகுத்துக் கூறப்பட்டுள்ளன.

அ) பிரமன் - பிரம, பத்ம புராணங்கள் - 2

ஆ) சூரியன் - பிரமகைவர்த்த புராணம் - 1

இ) அக்கினி - ஆக்கினேய புராணம் - 1

Department of Examinations - Sri Lanka

ஈ) சிவன் - சிவ, ஸ்கந்த, லிங்க, கூர்ம, வாமன, வராக, பவிஷ்ய, மத்ஸ்ய, மார்க்கண்டேய, பிரமாண்ட - 10

உ) விஷ்ணு - நாரத/ நாரதீய, பாகவத, கருட, விஷ்ணு – 4 புராணங்கள்

இவை கடவுளர்களது தெய்வீகச் சிறப்புகளையும், பெருமைகளையும் போற்றுகின்றன. பதினெண் புராணங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

**(05 புள்ளிகள்)**

**இ) புராணங்கள் கூறும் வழிபாட்டு முறைகள்**

சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய அறுவகைச் சமய நெறிகள் சார்ந்த வழிபாட்டு முறைகள் வளர்ச்சியடைந்தன. திருக்கோயில் வழிபாட்டு முறைகளைக் கூறுகின்றன. தானம், விரதம், தவம், தீர்த்தம், தலயாத்திரை, தோத்திரம், பக்தி, மூர்த்தி, தியானம் ஆகியவை முக்கியத்துவம்

சிவராத்திரி வழிபாடு, திருக்கார்த்திகை வழிபாடு, திருவெம்பாவை, கந்தசஷ்டி, ஆனிஉத்தரம் ஆகியவை சிறப்பு.

இறைவனைப் பல்வேறு நாமங்களால் போற்றி வழிபடும் மரபு.
அபிடேகம், சகஸ்ர நாமம் போன்றவை

**(05 புள்ளிகள்)**

**ஈ) பிற்காலப் பண்பாட்டு வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம்**

திருக்கோயில்கள் தென்னாட்டில் ஊர்தோறும் எழுச்சிபெற, புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகள் மூலமாக அமைந்தன. திருவண்ணாமலை, திருக்கடவூர் போன்றவை உதாரணம்.
தெய்வீகப் பரத்துவத்தை விளக்கி நிற்பன.

சிவனுக்குரிய அட்டவீரட்டக்கதைகளுடன் தொடர்புடைய அட்ட வீரத் தலங்கள்.
சிவபரத்துவம் - அடி முடி தேடிய கதை
விஷ்ணு பரத்துவம் - தசாவதாரங்கள்
சக்தி பரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தது.

தலபுராணங்கள் மற்றும் தமிழ்ப்புராணங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. கச்சியப்பரின் கந்தபுராணம், மகாத்மியங்கள் தோன்ற உதவியது.

கோயில் வழிபாடும் திருவுருவ வழிபாடும் சிறப்புடையன.

புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளுக்கேற்ப திருக்கோயில்களில் யம சங்காரம் , கஜமுக சங்காரம் , சூரசங்காரம் போன்றவை நிகழ்ந்து மக்கள் உள்ளங்களில் இறைநம்பிக்கை பக்தி உணர்வு வளம்பெற்றன.

திருமுறைகள், திவ்ய பிரபந்தம் ஆகியவற்றில் புராணச் செல்வாக்கு

பக்தி மரபு சிறக்கப் புராணங்கள் உதவின.



Department of Examinations - Sri Lanka

ஆலயங்களில் புராணபடன மரபு வளம் பெற்றது.

பிற்கால இலக்கிய மரபுக்கு மூலமாக அமைந்தன.

புராணங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, திருவுருவ அமைப்பு, விக்கிரகக் கலை, ஓவியக்கலை வளம்பெற்றன.

இந்து அறிவியற் சிந்தனை வளர்ச்சிக்கு மூலமாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் கந்தபுராணத்தின் வழி கந்தபுராணக் கலாசாரம் வளம்பெற உதவியமை குறிப்பிடற்பாலது.

சைவசித்தாந்த மரபு வளம் பெற்றது.

நண்பர் போல் அறிவுரை வழங்குவன.

புராணங்கள் கூறும் சமயமரபின் பயனாய் அறநெறி, ஒழுக்கநெறி, பக்திநெறி, இறை நம்பிக்கை ஆகிய பண்பாட்டு அம்சங்கள் வளர்ச்சியடைந்தன.

**(05 புள்ளிகள்)**

**02. தமிழகத்தில் பல்லவர் காலக் கோயிற் கட்டடக்கலையின் படிமுறை வளர்ச்சியை மேல்வரும் தலைப்புக்களில் விபரிக்குக.**

**அ) கட்டடக்கலை வளர்ச்சிக்கு மன்னர்களின் பங்களிப்பு**

**ஆ) குடைதளிகள்**

**இ) மலை தளிகள்**

**ஈ) கட்டுத் தளிகள்** (4 x 05 = 20 புள்ளிகள்)

**அ) கட்டடக்கலை வளர்ச்சிக்கு மன்னர்களின் பங்களிப்பு**

தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் கோயிற் கட்டடக்கலையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது.

கி.பி 6ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பல்லவ மன்னர்களது ஆட்சி தமிழகத்தில் இடம்பெற்றது.

மகேந்திரவர்மன், நரசிம்மன், இராஜசிம்மன், நந்திவர்மன் முதலிய மன்னர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இக்கால மன்னர்களின் ஆதரவு சைவ - வைணவ சமய நெறிகளுக்குக் கிடைத்ததோடு, இந்நெறிகள் சார்ந்த கோயிற் கட்டடக்கலை வளம்பெற தம் ஆதரவை நல்கினர். இவர்களது பெயரில் கோயிற் கட்டடக்கலைப் பாணிகள் உருவாகின.

இதன் பயனாக கோயிற் கட்டடக்கலை பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி பெறலாயிற்று. சிறப்பாக தமிழ்நாட்டில் கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியடைய அரச ஆதரவு பக்கபலமாக அமைந்தது.

**(05 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

**ஆ) குடைதளிகள்**

பல்லவர்காலக் கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்கள். குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் மரபைத் தொடங்கி வைத்த மன்னன் மகேந்திரவர்மன் ஆவான். மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர், வல்லம், பல்லாவரம் போன்ற குடைவரைக் கோயில்கள் இவ்வகைக்குச் சான்று. இவை பொதுவாக கருவறை, முகமண்டபம் என்பவற்றைக் கொண்டமைந்தவை.

**(05 புள்ளிகள்)**

**இ) மலைதளிகள்**

பல்லவர் காலக் கட்டடக்கலையின் இரண்டாம் கட்ட வளர்ச்சியைக் காட்டுபவை மலைதளிகளாகும். மலைதளிகள் - இரதக் கோயில்கள் , பாறைக் கோயில்கள் , செதுக்குத் தளிகள் எனவுங் கூறுவர். பாறைகளை கீழ் இருந்து மேலாகச் செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்களாக மலைதளிகள் உள்ளன. மாமல்லபுரத்தின் மலைதளி தருமராஜரதம் , அர்ச்சுன ரதம், பீம ரதம், சகாதேவ ரதம், திரௌபதி ரதம், வடக்குப் பிடாரி ரதம் , தெற்குப் பிடாரி ரதம் , வளையான்குட்டை ரதம், கணேச ரதம் என்ற பெயர்களினால் குறிப்பிடப்படுகின்றன.

**(05 புள்ளிகள்)**

**ஈ) கட்டுத்தளிகள்**

கற்களைச் சீர்செய்து, ஒன்றின் மேல் ஒன்றாக வைத்துக் கட்டுகின்ற கட்டுமானக் கட்டடக்கலையே கட்டுத்தளிகள் அல்லது கற்றளிகள் ஆகும். இம்மரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கட்டடக் கலைமரபாகும்

உதாரணங்கள் - மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், பனைமலைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் வனப்புடையது. பெரிய கற்றளியென பிற்காலச் சாசனங்கள் கூறுகின்றன. இக்கோயிலின் பிரதான அமைப்புக்களாக விமானம், மண்டபம், பரிவாரத் தேவர் கோட்டம், சுற்றாலை, கோபுரம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

நந்திவர்மன் கட்டடக்கலைப்பிரிவுக்குரிய ஆலயங்கள் அளவிற் சிறியன. உதாரணங்களாக காஞ்சி முத்தீஸ்வரர் கோயில், மதங்கேஸ்வரர் கோயில், திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயில்

**(05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**03. இலங்கையில் இந்துசமய பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்பினை மேல்வரும் தலைப்புக்களில் விபரிக்குக.**

**அ) வாழ்வியல் அறிமுகம்**

**ஆ) சமயப்பணி**

**இ) கல்விப்பணி**

**ஈ) கலைப்பணி** **(4 x 05 = 20 புள்ளிகள்)**

**அ) வாழ்வியல் அறிமுகம்**

சுவாமி விபுலானந்தர் கிழக்கு மாகாணத்திலே, மட்டக்களப்பிற்குத் தெற்கேயுள்ள காரைதீவில் 1892ஆம் ஆண்டு பிறந்தார். இளமையிற் தனது கல்வியைத் தக்கவர்களிடம் பயின்று, ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றவர்.

பாடசாலைக்கல்வி.

கொழும்பு ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி.

1916 இல் மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி.

1920 இல் இலண்டன் விஞ்ஞானப் பட்டதாரி

1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்து சுவாமி சிவானந்தரால் பிரபோத சைதன்யர் என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப் பெற்றவர்.

1924 இல் ஞான உபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சாநாமம் பெற்றவர்.

அவரது துறவு வாழ்வு இந்துசமயம் பண்பாட்டுத் துறைகளை வளம்பெறச் செய்யவும், மானிட நேயத்தை வளர்க்கவும் உதவியது.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் ஆகிய மொழிகளிலும் வல்லுநர்.

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் ஆகிய சமயப் பெரியார்களைப் போற்றி அவர்களது பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு இந்துசமய பண்பாட்டு வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்.

**(05 புள்ளிகள்)**

**ஆ) சமயப் பணி**

இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற சமய மகாநாடுகள், கருத்தரங்கு ஆகியவற்றுக்குத் தலைமை தாங்கியவர்.

மகாலட்சுமி தோத்திரம், நடராஜவடிவம், உமாமகேஸ்வரம், கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கவிநாயகர் இரட்டை மணிமாலை முதலிய சமய நூல்களை ஆக்கி மக்களிடையே சமய அறிவு விரிவடைய பணியாற்றியவர்.

சமயப் பிரசங்கம் - சொற்பொழிவுகள் நிகழ்த்தியமை. இலங்கையில் அத்வைத வேதாந்த மரபு பரவ உதவியவர். பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி வளம்பெற பணி செய்தவர்.

Department of Examinations - Sri Lanka

வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை, பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல் , வார இறுதியில் சமய வகுப்பு, பண்ணிசைப் பயிற்சி போதித்தல் இவற்றின்வழி இளந் தலைமுறையினர் இடையே சமய அறிவை வளர்க்க பணியாற்றியவர்.

**(05 புள்ளிகள்)**

**இ) கல்விப் பணி**

தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கும் பொருட்டு, சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவிற்கு சிபார்சு செய்தவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உதயமாக வித்திட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கை கொழும்பு தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் முதல் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

மேல்நாட்டுக் கல்வியை இந்துக் கல்வி மரபுக்கமைவாகப் போதிக்க வழிவகை செய்தார்.
இராமகிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை உருவாக்கியவர்.

1925 இல் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்று பணிபுரிந்தவர்.

பல்வேறு பிரபல பாடசாலைகளாகிய சிவானந்தா ஆண்கள் பாடசாலை, ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை, திருகோணமலை இந்துக் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளை நிறுவி, ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியவர்.

அநாதை ஆசிரமம் நிறுவி வசதி குறைந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
சமயம் சார்ந்த கல்விப் பணிக்கு முக்கிய இடமளித்தவர்.

**(05 புள்ளிகள்)**

**ஈ ) கலைப்பணி**

“இயலின்றி இசையில்லை இசையின்றி இயலில்லை” என்ற கொள்கையில் இசைத்தமிழில் மிகுந்த ஈடுபாடு – ஆய்விலும் ஈடுபட்டவர்.

காலத்திற்கேற்ப கவிதை புனைந்தவர். குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம் இயற்றியவர்.

நாடக நூல் - மதங்கசூளாமணி

இசைநூல் - யாழ் நூல்

முத்தமிழிலும் சுவாமி விபுலானந்தர் வல்லவர். “முத்தமிழ் வித்தகர்” சுவாமி விபுலானந்தர் போற்றப்பட்டமைக்கு அவரது பணிகளின் மேன்மைக்குச் சான்று.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

# இந்துநாகரிகம்

## பகுதி II

**04. வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுஜரது விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.**

**அ) 'விசிஷ்டாத்வைதம்'எனும் சொல்லின் பொருள் விளக்கம் (2புள்ளிகள்)**

**ஆ) ஈஸ்வரன் (6புள்ளிகள்)**

**இ) ஆன்மா (6புள்ளிகள்)**

**ஈ) ஆன்ம விடுதலைக்கான வழிகள் (6புள்ளிகள்)**

**அ) 'விசிஷ்டாத்வைதம்'எனும் சொல்லின் பொருள் விளக்கம்**

விசிட்டாத்வைதம் - விசேடமான அத்துவைதம்

விசிட்டம் + அத்வைதம்

விசேடணங்களுக்கும், விசேடியத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பே (விசிட்டம்) விசிட்டாத்வைதம்

ஈஸ்வரன் - விசேடியம்

அந்த விசேடியத்தின் விசேடணங்கள் - உலகு, உயிர்கள்

விசிஷ்டமாகிய ஈஸ்வரனுடன், ஆன்மாக்கள் அத்துவிதமாகக் கலத்தல் விசிட்டாத்வைதம் எனப்படும்

**(02 புள்ளிகள்)**

**ஆ) ஈஸ்வரன்**

விசிட்டாத்வைதக் கோட்பாட்டில் ஈஸ்வரன் பற்றிய விளக்கம்.

பிரம்மம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருள்களும் உண்மை என்ற அடிப்படையில் அமைவதே விசிட்டாத்வைதக் கோட்பாடு.

உயிர்கள் அனைத்தையும் உள்நின்று இயக்குபவன் இறைவன் - ஈஸ்வரன்.

உலக இயக்கத்திற்கும் இறைவனே காரணமாய் உள்ளான்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள இந்த சரீர சரீரி சம்பந்தம் இராமானுஜரது கொள்கையில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

உலகு உயிர்கள் ஆகியவற்றிற்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது என்ற பொருளில் அப்பிரதக்சித்தி என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றார்.

இவரது தத்துவத்தில் உலகு உண்டு, உயிர்களும் உண்டு. ஆனால் அவை, பிரம்மத்திற்கு விசேடணங்கள். பிரம்மம் அவ் விசேடணங்களை உடைய விசேடியம். இந்த விசேடணம் -

Department of Examinations - Sri Lanka

விசேடியம் ஆகிய இரண்டும் சேர்ந்த விசிட்டமே இராமானுஜர் பேசும் பரம்பொருள். எனவே இவரது கோட்பாடு விசிட்டாத்வைதம் எனப் பெயர்பெற்றது.

பிரம்மம் என்ற மூலப்பொருள் விஷ்ணு, ஸ்ரீமத் நாரயணமூர்த்தியே கடவுள்.

இறைவனுக்குரிய பண்புகள் கூறுகின்றார். இறைவன் பூரண அறிவுடையவன், ஐஸ்வர்யம், பலம், வீர்யம், தேஜஸ், ஞானம் ஆகியவை அவனது பண்புகள்.

சிருஷ்டி, திதி, சங்காரம், ஞானம் எனும் நான்கு தொழில்களை இயற்றுபவன். இறைவனின் சக்தி ஸ்ரீ. ஸ்ரீயினின்றும் பிரிக்க முடியாதவன் ஸ்ரீநிவாசன்.

**(06புள்ளிகள்)**

**இ) ஆன்மா**

ஆன்மாக்களாகிய சீவன் எண்ணிக்கையில் பல. அவை நித்தியமானவை. அழிவற்றவை. தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப உடல்களை எடுக்கின்றன.

மூவகை ஆன்மாக்கள் - எப்பொழுதும் முத்தி நிலையில் உள்ளவை
கட்டுண்ட நிலையில் இருந்து முத்தியடைந்தவை
எப்பொழுதும் கட்டுண்ட நிலையில் உள்ளவை

ஆன்மாக்களின் முக்கிய குணம் ஞானம் உடைமை. இதனை இராமானுஜர் தர்மபூதஞானம் எனக் குறிப்பிடுகின்றார். அந்தக்கரணங்களின் துணையுடனேயே அறியும் இயல்புடையது. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்பன அறிவின் இயல்புகள், ஆன்மாக்களின் துயருக்கும் இன்னல்களுக்கும் காரணம் அறிவுக்குறைவு.

**(06புள்ளிகள்)**

**ஈ) ஆன்ம விடுதலைக்கான வழிகள்**

ஆன்மாக்களின் கன்ம பலன்களின் அடிப்படையிலேயே வீடுபேறு கிடைக்கும்.

பகவானது பேரருளால் ஆன்மாக்களின் கன்மம் அழிந்து முத்திநிலையாகிய ஆன்ம விடுதலை கிடைக்கும்.

பிறவித்துன்பங்களில் இருந்து நீங்கி ஸ்ரீமத் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவதே ஆன்ம விடுதலையாகிய வீடுபேறு.

இதற்குக் கன்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் ஆகிய மூன்றும் ஆன்மாக்களுக்கு துணை செய்யும் என்பது இராமானுஜரது கொள்கை.

இவற்றுடன் பிரபக்தியையும் இராமானுஜர் கூறுகின்றார். இறைவன் மீது பூரண நம்பிக்கை வைத்து தன்னை முழுமையாக அவனிடம் ஒப்படைத்தலே பிரபக்தி ஆகும்.

மனிதனும் முயலவேண்டும் - அதே சமயம் இறைவனும் அருள வேண்டும் என்ற பிரபக்தி நெறியாக இராமானுஜர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

தியானம், உபாசனை ஆகியவையும் வீடுபேற்றிற்கு வழிவகுப்பவை

**(06 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

**05) சைவசித்தாந்த தத்துவ மரபில் ஆன்மா பற்றிய கொள்கையை ஆன்மாவின் இயல்புகள் அவற்றின் இலட்சியம் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக**

**(20 புள்ளிகள்)**

**ஆன்மாவின் இயல்பு**

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் ஒன்றெனச் சிறப்புப் பெறும் ஆன்மா பசு எனக் குறிப்பிடப்படுகின்றது. கடவுளைப் போலவே ஆன்மாவும் அநாதி. நித்தியப் பொருள். எண்ணிக்கை கடந்த பன்மையானவை.

- பசு - பாசத்தோடு சம்பந்தப்பட்டது.
- மும்மலங்களால் கட்டுண்டவை
- ஆன்மாவிற்குப் பல குணங்கள் உண்டு
- அவை அறிவித்தால் அறியும் தன்மை
- சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையது
- சிற்றறிவு சுதந்திரமற்றது கன்ம வினைகளை அனுபவிக்கும்
- பல பிறவிகளைப் பெறும்

ஆன்மாவிற்குப் பல பெயர்கள் உண்டு. ஜீவன் சதசத்து எனக் கூறப்படுகின்றது.

ஆன்மாவும் மும்மலங்களும்

1. கேவலாவத்தை
2. சகலாவத்தை
3. சுத்தாவத்தை விளக்கப்படுதல் வேண்டும்

பசுக்களாகிய ஆன்மா பெத்த நிலையில் மூவகைப்படும்

1. விஞ்ஞானகலர் 2. பிரளயாகலர் 3. சகலர்

ஆன்மா புரியும் வினைகளுக்கேற்ப அவற்றின் செயலை அனுபவிக்க ஏற்ற உடம்பைப் பெறுவன. மலங்கள் மூவகை – ஆணவம் , கன்மம் , மாயை

ஆணவம் ஆன்மாவின் குணமன்று குற்றமே.

நான் என்னும் அகந்தை, இது எனது என்னும் மமதை, ஆணவத்தால் ஆன்மாக்களுக்கு உண்டாகின்றன.

ஆணவம் செம்பிற் களிம்பு போன்று உயிருடன் கலந்து நிற்கும்.

அது இருள்மலம்.

ஆன்மாவின் இலட்சியம்.

ஆன்மா பிறப்பை ஒழித்து முத்தி பெற மலங்களிலிருந்து விடுபட வேண்டும்.

ஆன்மா தன் இலட்சியத்தை அடைய சைவசித்தாந்தம் பல வழிகளைக் கூறுகின்றது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்கள்.

Department of Examinations - Sri Lanka

இந்நான்கு வழிகளாலும் ஆன்மா படிமுறையாக முத்தி நிலையை நோக்கிச் செல்லும்
இதன் முதற்படி தீட்சையாகும்.

மனிதப்பிறவி எடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை "இறைபணி நிற்றல்" என்பர். அகப்பூசை, புறப்பூசை, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் எனும் படிநிலைகளாக சைவசித்தாந்தம் கூறும்.

இறைவன் குருவடிவாக வந்து, ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்ப அவற்றை ஆட்கொள்வான். இவ்வாறு ஆன்மா மலங்கள் ஒழிந்து திருவருட்சக்தியினால் ஞானம் பெற்றுப், பிறவிச் சுழற்சியிலிருந்து நீங்கி முத்திநிலையாகிய வீடுபேற்றை அடையும்.

இறைவன் திருவடியை அடைந்து பேரின்பம் பெறுதலே முத்திநிலை. இந்நிலையை "தாடலை போல் கூடல்" எனத் திருவருட்பயன் கூறும்.

இதுவே ஆன்மாவின் இலட்சியம்.

**06. இந்து வாழ்வியலில் அறம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை விபரிக்குக.**

**(20 புள்ளிகள்)**

இந்துசமயம் சார்ந்த ஒழுக்கவியல் சிந்தனைகளையும், அறச் சிந்தனைகளையும் உள்ளடக்கி நிற்பதே இந்து அறவியல்.

தர்மம் எனும் சொல் அறம், ஒழுக்கம், நீதி, தானம், கடமை எனப் பல பொருள்படும்.

தர்மம் - "த்ரு" எனும் சொல்லின் வினையடி
பொருள் - தாங்குவது
அறு + அம் = அறம்
தகுந்த வழியில் நடத்தல்

மனிதனின் இன்ப, துன்பங்களுக்கு அடிப்படையாக அமைவது.

இந்து அறமானது மனிதன் சுகமாக வாழவும், இன்பம் பெறவும், துன்பங்களைத் தாங்கவும் வழி சமைக்கிறது.

இந்து அறவியற் சிந்தனைகளை வலியுறுத்தும் நூல்கள் - வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், பகவத்கீதை, தர்மசாஸ்திரங்கள், அர்த்த சாஸ்திரம், திருமந்திரம், திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, பன்னிரு திருமுறைகள்.

இந்து இறை நம்பிக்கையும் அற வாழ்வும்.

தனிமனித ஒழுக்கத்திலும், சமூக மேம்பாட்டிலும் அறத்தின் முக்கியத்துவம்.

இந்து சமூகக் கோட்பாடுகள் ஊடாக அறத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுதல்.
உதாரணம் - வர்ணக் கோட்பாடு, ஆச்சிரமக் கோட்பாடு, புருடார்த்தக் கோட்பாடு.

Department of Examinations - Sri Lanka

இந்து இலக்கியங்கள் ஊடாக வலியுறுத்தப்படும் அற விழுமியங்கள்.

வேதங்கள் - ரிதம் - அறக்கடவுள்

வர்ண சூக்தம் - இயற்கை அற ஒழுங்கோடு தொடர்புபடுத்தப்பட்டமை

உபநிடதங்கள் - ஸத்தியம் வத – உண்மை பேசு

தர்மம் சர – தர்ம வழியில் நட

பித்ரு தேவோ பவ – தந்தையைத் தெய்வமாகப் போற்று

மாத்ரு தேவோ பவ – தாயைத் தெய்வமாகப் போற்று

இவ்வாறு ஏனைய இலக்கியங்கள் வலியுறுத்தும் விழுமியப் பண்புகள்.

இந்து விரதங்கள், விழாக்கள் ஊடாக அறியப்படும் அற விழுமியங்கள்.

உதாரணம் தைப்பொங்கல், தீபாவளி

அரச தர்மங்கள் - அரசன் தர்மத்தின் காவலன்.

நன்னடத்தைப் பண்புகள் - அஹிம்சை, பொறுமை, தயை, தானம்…

ஆன்மீக விடுதலையும், அற வாழ்வும்

ஆன்மீக இலட்சியத்தின் இறுதிப்பேறு வீடுபேறு. அந்தவகையில், ஆன்மீக இலட்சியத்தினை அடைவதற்கு அறவாழ்வின் முக்கியத்துவம்.

**07. இந்து அறிவியல் மரபில் மருத்துவக் கலையின் சிறப்பம்சங்களை விளக்குக.**

**(20 புள்ளிகள்)**

இந்து அறிவியல் மரபில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என இருவகை மருத்துவ அறிவுப் புலங்கள் வளர்ச்சி பெற்றன.

**ஆயுர்வேதம்** - உபவேதங்களில் ஒன்று.

வைதீக மரபு சார்ந்து வளர்ச்சி பெற்றது.

அதர்வ வேதத்தில் முக்கியத்துவம் பெற்றது.

நோய்க்காரணி, உடற்கூற்றியல், குருதிச் சுற்றோட்டம், நாடி – நாளம் பற்றிய அறிவு விருத்தியடைதல்.

சுஸ்ருத – சரக சம்ஹிதைகளின் முக்கியத்துவம்.

அறுவைச் சிகிச்சை முறைகள் அறியப்பட்டிருந்தமை.

சுஸ்ருத சம்ஹிதை – சல்யதந்திரா

Department of Examinations - Sri Lanka

**சித்த மருத்துவம்**

தென்னிந்தியாவில் குறிப்பாக பதினெண் சித்தர் பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது.

திருமூலர், அகத்தியர், தேரையர், போகர் முதலியோரின் பனுவல்கள் குறிப்பிடத்தக்கவை.

உணவே மருந்து என்ற கருத்து நிலை

பக்கவிளைவுகள் அற்ற தன்மை

சுதேசிய மக்களின் காலநிலை, உணவுவகை, தொழில்களுக்கு ஒத்திசைவானது.

**பழந்தமிழ் இலக்கியங்களிலும், மருத்துவத்துடன் தொடர்புடைய கருத்துக்கள் இழையோடியுள்ளன.**

சங்க இலக்கியங்கள் - மருத்துவன் தாமோதரனார்

போர் - விழுப்புண் மூலிகைகள்

அறநெறிக்கால இலக்கியங்கள் - திருக்குறளில் ''மருந்து'' அதிகாரம்

நூல்களின் பெயர்களில் மருந்து – திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம்

பல்லவர்கால நாயன்மார்களின் அற்புதங்கள் மருத்துவத்துடன் தொடர்புடையவை – வெப்புநோய் தீர்த்தல்

**இந்துக்களின் சமய வாழ்வில் மருத்துவம்**

ஆலயங்கள் மருத்துவ சாலைகளாகத் தொழிற்பட்டமை இந்துக்களின் சமய வாழ்வியல் நடைமுறைகளும், பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் இயல்பாகவே மருத்துவக் கலையுடன் தொடர்புடையவை.

விரத நடைமுறைகள்

அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள்

விபூதி அணிதல், உருத்திராக்கம் அணிதல்

யோகாசனம், தியானம், கூட்டுப்பிரார்த்தனை – உள நெருக்கீடுகளுக்கான தீர்வு

யாத்திரை செய்தல்

தலவிருட்சம் சுற்றுதல்

தோப்புக்கரணம் போடுதல்

பிரசாதங்களில் மருத்துவ குணம்

மஞ்சள், வேம்பு, பஞ்சகவ்வியங்களில் மருத்துவ குணம்



Department of Examinations - Sri Lanka

**08) புராதன இந்துக்கள் பேணிவளர்த்த கல்விப் பாரம்பரியம் பற்றி அதன் நோக்கம், கல்வி முறை ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக.**

**(20 புள்ளிகள்)**

புராதன இந்துக் கல்விப் பாரம்பரியம் இருவகைப் போக்குடையதாகக் காணப்பட்டது.

1. ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த அறிவைப் பெறுதல்
2. உலகியல் சார்ந்த அறிவைப் பெறுதல்

இவற்றை முறையே பரவித்தியா, அபரவித்தியா என அழைத்தனர்.

பர வித்யா - ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த கல்வி. வேத உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டது. உயரிய இலட்சியத்தை அடைய வழிகாட்டியது.

அபரவித்தியா - உலகியல் சார்ந்த தொழில்சார் கல்வியாகக் கருதப்பட்டது.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன அந்தணர்களுக்குரிய செயற்பாடுகளாக அமைந்தன.

சாதாரண மக்களுக்குரிய தொழிற்கல்வி தந்தைவழி மரபில் போதிக்கப்பட்டது.

இந்துக்கல்வியின் நோக்கம் ஆன்மீக இலட்சியமாகவும், தனிமனித வாழ்விலும் - குடும்ப வாழ்விலும் அறநெறியைக் கடைப்பிடித்தலையும் கொண்டது.

சமூக நோக்கம் - இந்துசமூகத்தில் தர்மத்தைப் பேணல், நாட்டில் அமைதி, சமாதானம், ஒற்றுமை பேணலும் கல்வியின் நோக்கமாக அமைந்தது.

அரசநோக்கம் - அரச தர்மத்தைப் பற்றியது.

**புராதன இந்துக்களின் கல்விமுறை**

புராதன கல்விமரபு குருகுலவாசக் கல்வியையே சிறப்பாகக் கருதியது.

பிரமச்சரிய நிலையிலுள்ள மாணாக்கர் குருகுலவாசம் செய்து, கல்வி கற்கவேண்டும் எனவும் அதுவே கல்விக்குரிய காலமாகவும் கருதப்பட்டது.

குருசீட பரம்பரையில் பெரும்பாலும் செவிவழி மரபிலேயே கல்வி போதிக்கப்பட்டது. மனனமே கல்வியின் அடிப்படையானது. குருகுலக் கல்வியின் இலட்சியமாக ஒழுக்கம் சிறப்பிடம் பெற்றது. குருகுலக்கல்விப் பயிற்சியின் நிறைவில் தன் குருவுக்குப் பொருத்தமான குருதட்சணை வழங்குவது மரபு.

குருகுலக்கல்வியில் சீடன் குருவின் இல்லம் நாடிச் செல்லுதல் , அங்கு குருகுல வாழ்வு, குருசேவை, குருபக்தி, குருதர்மம், குருஒழுக்கம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றன. இக்கல்விப் பயிற்சியின் உயர்நிலையை உபநிடதங்கள் காட்டி நிற்கின்றன. மாணவன் குருவிற்குப் பணிவிடை செய்து குருவிடம் கல்வி கற்றான். புராண இதிகாசங்களில் முனிவர்களது ஆச்சிரமங்களே கல்வி நிலையங்களாக சிறப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு வேத

Department of Examinations - Sri Lanka

உபநிடதக் கல்வியோடு வில்வித்தை, மருத்துவம், சோதிடம், இலக்கணம் என்பனவும் கற்பிக்கப்பட்டன. குருகுலக்கல்வியின் நிறைவில் ஆசிரியர் மாணவனுக்கு வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களை உபதேசிக்கிறார். ''சத்தியத்தைப் பேசு'', ''தர்மத்தைக் கடைப்பிடி'', ''பெற்றோரை தெய்வமாகப் போற்று'', ''குருவைத் தெய்வமாகப் போற்று'', ''குருசீட உறவை அறுத்துவிடாதே'' போன்ற அறிவுரைகள் கூறப்பட்டன.

கல்வியின் பயன் ''இறைவனது திருவடிகளைத் தொழுதல்'' என்பது திருக்குறள் தரும் இலட்சியம். கற்க வேண்டியவற்றைக் கற்று அவற்றுக்கேற்ப வாழ்தல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அரசியல் கல்வி -**

வேத இதிகாச புராணங்களில் சத்திரியர்களுக்கு வேதக் கல்வியோடு அரசியற் கல்வி இராஜதர்மம் போதிக்கப்பட்டது. அரசியல் முறைமை, அரசியல் நிர்வாகம், நீதிபரிபாலனம், சமூகப் பாதுகாப்பு முதலியவற்றின் பொருட்டு தர்ம சாத்திரங்கள், அர்த்த சாத்திரங்கள் என்பனவும் போதிக்கப்பட்டன. போர்க்கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன. இந்துக் கல்வி மரபில் புராதன கல்விக் கூடங்கள் பல சிறப்படைந்தன. நாலந்தா, காஞ்சி கடிகைஸ்தானம், பாடலிபுரம் , காசி குறிப்பிடத்தக்கன. மடங்கள் ஆதீனங்களிலும் கல்வி போதிக்கப்பட்டது.

Department of Examinations - Sri Lanka